# இராமேஸ்வரம் நகர் மன்றகூட்டம்

## 2019 ஆம் ஆண்டு மே மாதம் 31ம் தேதிகாலை 11 : 00 மணிக்குநடைபெற்றநகர்மன்றக்கூட்டநடவடிக்கை

.................................................................................................................................................

### முன்னிலை: அ. வீரமுத்துகுமார் B.Tech.,
### தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர், இராமேஸ்வரம் நகராட்சி

<table>
<tr><th>பொருள் எண்</th><th>பொருள்விபரம்</th><th>தீர்மானவிபரம்</th></tr>
<tr><td>1</td><td>2019–ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12–ன் கீழ் ஏற்படுத்தப்படும் உப விதிகள்<br><br>தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920ன்பிரிவு 306(28A) ன் படியும், 2019ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12ன் கீழ் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கிவீசப்பட்ட நெகிழியை (Use and throwaway Plastic) சேகரித்தல்(Storage) வழஙகுதல்(Supply) கொண்டு செல்லுதல்(Transport)விற்பனை செய்தல்(Sale) மற்றும் பகிழுந்தளித்தல்(Distribution) ஆகியவற்றை தடை செய்து மேற்கண்ட துனை விதிகளை மீறுகின்ற நபருக்கு கீழ்கண்டவாறு அபராதம்விதிக்கவும் துணை விதிகள் ஏற்படுத்தலாம்.<br><br>
<table>
<tr><td>1.</td><td>(i)</td><td>செயலாக்க அதிகாரி: நகராட்சிப் பகுதிகளில் செயலாட்சி அதிகாரி எனப்படுபவர் நகராட்சி ஆணையாளர் ஆவர்.</td></tr>
<tr><td></td><td>(ii)</td><td>ஆய்வு நடத்தும் அதிகாரி: ஆய்வு நடத்தும் அதிகாரி எனப்படுபவர்கள் நகராட்சிப் பகுதிகளில் துப்புரவு பணிமேற்பார்வையாளர், துப்புரவு ஆய்வாளர், மற்றும் ஆணையரால் அதிகாரமளிக்கப்பட்ட பிற பணியாளர்களாவர்.</td></tr>
<tr><td></td><td>(iii)</td><td>மேல்முறையீட்டு அலுவலர்: இந்த உபவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருளடக்கம் தொடர்பான கருத்துகளில் மேல் முறையீட்டு அலுவலர் ஆணையரே ஆவார்.</td></tr>
</table></td><td>தீர்மானம் எண். 216 அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | (iv) | **தண்டனைகள் விதிக்கும் முறைகள்:**<br><br>இந்த உப விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிகளை மீறுபவர்களுக்கு முதல்முறை இரண்டாம் முறை மற்றும் மூன்றாம் முறையான குற்றத்திற்கு அட்டவணை 2ல் கண்டுள்ளவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அபராதத்தை குற்றம் நடைபெறுகின்ற இடத்திலேயே(Spot fine) வசூலிக்கப்படுவதுடன் தடை செய்யப்பட்ட நெகிழிகள் பறிமுதல் செய்யப்படும். நான்காவது முறையாக மீறுபவருக்கு உடனடியாக தொழில் உரிமம் இரத்து செய்யப்படும். | |
| 2 | | **வர்த்தக நிறுவனங்களின் வகைப்பாடு :**<br><br>I. மொத்தமாக (Whole sale) சேமித்தல்/வழங்குதல்/கொண்டு செல்லுதல்/ விற்பனை செய்தல்/பகிர்ந்தளித்தல்<br>II. வணிக வளாகங்கள், துணிக்கடைகள் பல்பொருள் அங்காடிகள், திரை அரங்குகள், திருமண மண்டபங்கள், மதுபான கூடங்கள், தொழிற்சாலைகள், பள்ளி கல்லூரி நிறுவனங்கள் மற்றும் பெரிய வணிக நிறுவனங்கள்.<br>III. மளிகை கடைகள், மருந்து கடைகள், பழக்கடைகள், காய்கறி கடைகள், இறைச்சி மற்றும் மீன்கடைகள் முதலானவைகள்,<br>**IV.** சிறிய வணிக விற்பனையாளர்கள், தெருவோரக்கடைகள் மற்றும் இதர வணிக நிறுவனங்கள்.<br>**<u>இந்த துணை விதியை மீறினால் செலுத்தும் அபராதம்:-</u>** | |
| 3. | இந்த துணை விதிகள் தொடங்கிய நாளும் அதற்கு பின்பும் பழக்கப்படும் / எச்சரிக்கை காலம் 30 நாட்கள் ஆகும். அதற்கும் பிறகு இந்த துணை விதிகளை மீறுதல் இருந்தால் அபராத அட்டவணைப்படி இந்த துணை விதி மீறும் நிகழ்வு ஒவ்வொன்றுக்கும் அபராத தொகையுடன் தண்டிக்கப்படுவார்.துணை விதிகளை மீறும் யாராவது ஒருவர் அல்லது மாசு படுத்துவர் | | |

| | |
|---|---|
| | |
| 4. | அட்டவணை II-ல் குறிப்பிட்டபடி அபராத தொகை கட்ட இயலவில்லை அல்லது மறுத்தாலோ எனில் அவருக்கு எதிராக கடையை / நிறுவனத்தை அல்லது குடோனைப் பூட்டி முத்திரை இடுவதுடன் நகர காவல் சட்டம் / இந்திய குற்றவியல் நடைமுறை சட்டம் / மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 / பொது சுகாதார சட்டம் 1939 ன்படி வழக்கு மற்றும் மேல்நடவடிக்கை எடுக்கப்படும். |
| 5. | **<u>மேல் முறையீட்டுக்கு உரிமை:-</u>**<br><br>**இராமேஸ்வரம்**நகராட்சியின் இந்த துணை விதிகளில் பாதிப்படைந்த யாரும் ஆணையாளருக்கு மேல் முறையீடு செய்ய உரிமையுள்ளவர்கள் ஆவர். இந்த துணை விதிகள் இராமேஸ்வரம் நகராட்சி நகர் மன்றத்தின் உரிய ஒப்புதல் பெற்று நடைமுறைக்கு வந்துள்ளன. |

6.**தண்டனைகள் விபரம்:-**

**அட்டவணைII**

**பிரிவு 306 (28-A)-ன்படி இயற்றப்பட்ட துணை விதிகளை மீறுவதற்கான தண்டங்கள்**

| வரிசை எண். | குற்றங்கள் | முதன்முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் |
|---|---|---|---|---|
| | பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | i. | சேமித்தல்,வழங்குதல் கொண்டு செல்லுதல் விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 25000 | 50000 | 100000 | | |
| | | ii | வணிக வளாகங்கள், துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 10000 | 15000 | 20000 | | |
| | | iii. | மளிகைக்கடைகள் மற்றும் மருந்துக்கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 1000 | 2000 | 5000 | | |
| | | iv | சிறிய வணிக விற்பனையாளர்கள் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை | | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 100 | 200 | 500 |

6.**தண்டனைகள் விபரம்:-**

**அட்டவணைII**

**பிரிவு 306 (28-A)-ன்படி இயற்றப்பட்ட துணை விதிகளை மீறுவதற்கான தண்டங்கள்**

| வரிசை எண். | குற்றங்கள் | முதன்முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் |
|---|---|---|---|---|
| i. | பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை சேமித்தல்,வழங்குதல் கொண்டு செல்லுதல் விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 25000 | 50000 | 100000 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | ii | வணிக வளாகங்கள், துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 10000 | 15000 | 20000 | | |
| | iii. | மளிகைக்கடைகள் மற்றும் மருந்துக்கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 1000 | 2000 | 5000 | | |
| | iv | சிறிய வணிக விற்பனையாளர்கள் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 100 | 200 | 500 | | |

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலகக்குறிப்பு</u>**<br><br>மன்றம் அனுமதிக்கலாம். | |
| **2** | இராமேஸ்வரம் நகராட்சிதொடர்பானசென்னைஉயர்நீதிமன்றமதுரை கிளை 5– எண்ணம் வழக்குகளுக்குவழக்குகட்டணம் ரூ.75000/– திரு.M.கண்ணன் அவர்களுக்குவழங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br><br>அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண். 217 அனுமதிக்கப்பட்டது.** |
| **3** | இராமேஸ்வரம் நகராட்சி வார்டு எண் 1 முதல் 21க்குட்பட்ட தெருக்களில் உள்ள தெருமின் கம்பங்களில் உள்ள தெருமின் விளக்ககள் மற்றும் உயர்மட்ட கோபுர விளக்குகள் ஆகியவற்றினை சரிவர ஒளிரச்செய்திட தேவையான உதிரிபாகஙகள் மற்றும் CFL பிட்டிஙகுகள் வாஙகிட ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு 21–03–2018 ஆம் தேதியில் முதன் முதலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்காணும் விவரப்படியாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>1 — M/s Sri Sabaries Traders, No : 33 chokkikolam, Madurai — மதிப்பீட்டை காட்டிலும் 0.06 % குறைவு<br>2 — M/s Mahaveer Electro Control, No : 66 West Masi Street Madurai — மதிப்பீட்டை காட்டிலும் 0.84 % கூடுதல்<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>** | **தீர்மானம் எண். 218 அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr><td></td><td>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைக்காட்டிலும் 0.06 % குறைந்தா ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள நிறுவனம் M/s Sri Sabaries Traders, No : 33 chokkikolam, Madurai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.</td><td></td></tr>
<tr><td>4</td><td>திட்டப்பணிகள் குறித்த விளம்பரத்தினை தினத்தந்தி நாளிதழ் வாயிலாக பிரசுரம் செய்ததற்கு விளம்பரக்கட்டணம் ரூ.41580/– செலுத்த மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மானம் எண். 219 அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>5</td><td>இராமேஸ்வரம் நகராட்சி துப்புரவு ஆய்வாளர் அவர்களின் குறிப்பின்படி, இரண்டு எண்ணம் TATA ACE வாகனத்திற்கு 8 எண்ணம் டயர்கள் வாஙகவும் குப்பை வண்டி டிரை சைக்கிள் வண்டிகளில் பழுதுநீக்க பணிகள் செய்யவும், அதற்கான செலவினத்திற்கும் மன்ற அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>பொதுசுகாதார பணிகளின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மானம் எண். 220 அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>6</td><td>இராமேஸ்வரம் நகராட்சி பொதுசுகாதார பிரிவிற்கு TATA ACE வாகனத்திற்கு 8 எண்ணம் டயர்கள் புதிதாக வாஙக இந்நகராட்சி ஓட்டுநர் திரு.தில்லை கருப்பையா என்பவர் மூலம் நேரில் சென்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டும் எண்ணம் விலைப்பள்ளிகள் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><table><tr><td>1</td><td>Bismi Tyres & Lubriation<br>Ramanathapuram</td><td>Per Tyre Rate<br>2750 /–</td></tr><tr><td>2</td><td>Madurai Sundar Tyres</td><td>Per Tyre Rate</td></tr></table></td><td>தீர்மானம் எண். 221 அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | (continued) \| \| Ramanathapuram \| 2800 /– \|<br><br>**அலுவலகக்குறிப்பு:**<br><br>வரப்பெற்ற இரண்டு எண்ணம் விலைப்புள்ளிகளில் குறைந்த பட்ச விலைப்புள்ளி தொகை கொடுத்துள்ள நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம் நகர்மன்ற தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவை மன்ற அனுமதிக்கலாம். | |
| **7** | இராமேஸ்வரம் நகராட்சி பகுதியில் 14–10–2018 அன்று தீவு வளர்ச்சி குழுவின் மனித சங்கிலி நிகழ்வு நடைபெற உள்ளதால், நகராட்சி நிர்வாக மண்டல இயக்கநர், மதுரை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 6530/2017/அ3 நாள் : 11–10–2018ன் படி மற்ற நகராட்சியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியாளர்கள் மற்றும் ஓட்டுநர்களுக்கு 13–10–2018 மற்றும் 14–10–2018 ஆகிய இரண்டு நாட்கள் உணவு, இருப்பிட வசதிகள் ஏற்படுத்தி கொடுக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.75000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br><br>**அலுவலகக்குறிப்பு:**<br><br>மேற்காணும் விபரப்படிஏலதாரர்களால்கேட்கப்பட்டஏலக்கேள்விதொகைகள்மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளைஒப்பிடுகையில்அதிகபட்சஏலக்கேள்விதொகையானதிரு.துரைபூபதிஎன்பவரின் ஏலக்கேள்வியினைமன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண். 222 அனுமதிக்கப்பட்டது** |
| **8** | இராமேஸ்வரம் நகராட்சி பொதுசுகாதார ஆய்வரின் குறிப்பு அறிக்கையின் படி, தமிழ்கத்தில் ஃபானி புயல் அச்சுறுத்தலின் காரண்மாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பொது சுகாதார பணிக்கு கீழ்க்கண்ட விபரப்படியான பொருட்களை Q 813 Ramanathapuram District Consumer's Co-op whole sale stones ltd வாஙகவும் அதற்கான உத்தேச செலவினத்திற்கும் மன்றத்தின் பார்வைக்கு அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. | **தீர்மானம் எண். 223 அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>1</td><td>சுண்ணாம்பு தூள் – 3 டன்</td></tr>
<tr><td>2</td><td>பிளிச்சிங் பவுடர் – 2 டன்</td></tr>
<tr><td>3</td><td>லெமன்கிராஸ் ஆயில் – 250 லிட்டர்</td></tr>
<tr><td>4</td><td>கிளவுஸ் – 30 எண்ணம்</td></tr>
<tr><td>5</td><td>பேஸ் மாஸ்க் – 30 எண்ணம்</td></tr>
<tr><td>6</td><td>ரிப்லெக்ட் சாக்கெட் – 35 எண்ணம்</td></tr>
<tr><td>7</td><td>மூல்கிஸ் பாரியட் – 20 எண்ணம்</td></tr>
<tr><td>9</td><td>ஆரிவால் – 10 எண்ணம்</td></tr>
<tr><td>10</td><td>பினாயில் – 1000 லிட்டர்</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு:</u><br>
ஃ பானி புயலின் அச்சுறுத்தலின் காரணமாக அவசர அவசியம் கருதி பொருட்களை உடன் சப்ளை செய்ய ஏதுவாக தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று சப்ளை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>9</td>
<td>இராமேஸ்வரம் நகராட்சிக்குட்பட்டபகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்திடும் பொருட்டு 52.00 கிமீ நீளத்திற்கு குடிநீர் பகிர்மானக்குழாய் மற்றும் நீர் ஏற்றும் குழாய்கள் அமைந்துள்ளது. இந்நிலையில் நகராட்சி பகுதிகளில் மத்திய மாநில அரசின் சாலைவிரிவாக்க காரணமாக ஏற்படும் குடிநீர் குழாய்உடைப்பு மற்றும் அடைப்பு ஏற்பட்டதை சரிசெய்யவும், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின் கம்பங்கள் தோண்டடும் போது ஏற்படும் உடைப்பு, பாதாளச்சாக்கடை தோண்டும் பணி மற்றும் சாலை ஓரங்களில் உள்ள மரங்களின் வேர்களால் பகிர்மான குழாய் மற்றும் குடிநீர் ஏற்றும் குழாய்கள் சேதம் அடைகின்றன. இதனால் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்திட இயலவில்லை இது தொடர்பாக பொதுமக்கள் புகார் தெரிவிக்கும் பட்சத்தில் உடனடியாக குடிநீர் குழாய் உடைப்புகளை சரியய</td>
<td>தீர்மானம் எண். 224 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td>இயலவில்லை மேலும் குடிநீர் பணிகளை சரி செய்யவும் உடனடியாக மராமத்து பணிகள் செய்திடவும் போதிய பணியாளர்கள் இல்லாததினால், பொதுமக்களுக்கு சீராக குடிநீர் விநியோகம் செய்திடும் பொருட்டு குடிநீர் விநியோகம் உதிரி பொருட்கள் வாங்கிடவும், மராமத்து செய்திடவும் ரூ.10.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலகக்குறிப்பு:</u><br><br>குடிநீர் விநியோகம் பணியின் அவசர அவசியம் கருதி அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>10</td><td>இராமேஸ்வரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களின் 08–05–2019ம் தேதிய முன் அனுமதியின் படி டிரை சைக்கிள் 4 வண்டிகளில் பழுது நீக்கப்பணிகள் செய்ய இந்நகராட்சி துப்புரவு மேற்பார்வையாளரால் நேரில் சென்று வாங்கி வரப்பெற்ற இரண்டு எண்ணம் விலைப்புள்ளி கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br><table><tr><td>1</td><td>ரமேஷ் சைக்கிள் மார்ட் & ஒர்க்ஸ், இராமேஸ்வரம்</td><td>1 நடைக்கு / ரூ.5600</td></tr><tr><td>2</td><td>சேதுபதி சைக்கிள் மார்ட் & ஒர்க்ஸ், இராமேஸ்வரம்</td><td>1 நடைக்கு / ரூ.6000</td></tr></table><br><u>அலுவலகக்குறிப்பு:</u><br><br>பொது சுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கலாம்.</td><td>தீர்மானம் எண். 225 அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>11</td><td>இராமேஸ்வரம் நகராட்சி இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள இரண்டாம் நிலை நகராட்சியாகும். 21 வார்டுகளை கொண்ட இந்நகராட்சியின் மக்கள் தொகை 44797 ஆகும் ( 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி ). இந்நகராட்சியின் மொத்த பரப்பளவு 53 சதுர கிலோ மீட்டர்</td><td>தீர்மானம் எண். 226 அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | மேற்படி பரப்பளவில் 10 சதுர கி. மீ மக்கள் வசிக்கும் நகரபகுதியாகும். 107 தெருக்கள் அடங்கிய இந்நகரில் உத்தேசமாக 12746 குடியிருப்புகள் உள்ளது. இந்நகரம் மிக முக்கிய உலக புகழ் பெற்ற வழிபாட்டுத்தலங்களில் ஒன்றாகும். ஆண்டொன்றுக்கு நாட்டின் அனைத்து பகுதிகளிலிருந்தும் சராசரியாக 1 கோடி யாத்ரீகர்கள் இந்நகரிலுள்ள இராமநாதசுவாமி கோவிலுக்கு வந்து செல்கிறார்கள்.<br>மேலும் 1964 ம் ஆண்டு தனுஷ்கோடியானது முற்றிலுமாக இயற்கை சீற்றத்தால் அழிவுற்றப்பட்டது. மாண்புமிகு இந்திய பாரத பிரதமர் அவர்கள் 27.07.2017 அன்று தனுஷ்கோடி அரிச்சல்முனையில் புதியதாக உருவாக்கப்பட்ட தார்சாலையை திறந்து வைத்துள்னர். மேற்படி பகுதியில் சுற்றுலா பயணிகளின் வருகை மற்றும் யாத்ரீகர்கள் வருவதால் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2000 ன்படி தூய்மையான நகரமாக பேண பேருந்து நிலையத்தில் இருந்து அரிச்சல்முனை வரை (23 கி.கீ) போதிய எண்ணிக்கையில் துப்புரவு பணியாளர்கள் இல்லாத காரணத்தால் பொதுச்சுகாதாரப்பணியில் சுணக்கம் ஏற்படுகிறது. இந்நகர் கோயில் நகரமாக இருப்பதால் அயல்நாடு மற்றும் இந்நாட்டைச் சேர்ந்த யாத்ரீகர்கள் அதிக எண்ணிக்கையில் தினசரி வந்து செல்கின்றனர். மேலும், அடிக்கடி மாண்புமிகு மத்திய, மாநில அமைச்சர்கள் வந்து செல்லும் தலமாகவும் உள்ளது. தை, ஆடி அமாவாசை மற்றும் மாதந்தோறும் வரும் அமாவாசைகளில் தர்ப்பணம் செய்பவர்கள் அதிக அளவில் வந்து செல்வதால், அக்னிதீர்த்தம், தனுஷ்கோடி அரிச்சல்முனை கடலில் விடும் கழிவு துணிகள் மற்றும் தர்ப்பணப் பொருட்கள், கடல்பாசிகள் அதிகளவில் கடற்கரையில் ஒதுங்குவதால் துப்புரவு பணி செய்வதில் கூடுதல் சுமை ஏற்படுகிறது. எனவே, பொதுமக்கள் நலன்கருதி பொதுசுகாதாரம் பேண அரசாணை நிலை எண்.101 தவிர்த்து கூடுதலாக 39 துப்புரவு பணியாளர்கள் மற்றும் 1 துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் கூடுதலாக தேவைப்படுகிறது.<br>**கணக்கீடு விபரம் திடக்கழிவு மேலாண்மை திட்ட 2016 விதிகளின்படி தேவைப்படும் பணியாளர்கள் விபரம்** | |

| | |
|---|---|
| 750 மீட்டர் முதல் 1000 மீட்டர் வரை உள்ள சாலைக்கு ஒரு நபர் வீதம் 23 கி.மீ க்கு தேவைப்படும் துப்புரவு பணியாளர்கள் | **23** நபர்கள் |
| ஒத்ததாழை, கோதண்டம் ராமர் கோயில், கம்பிபாடு, தாவுக்காடு, முகுந்திராயர் சத்திரம், பாலம், தனுஷ்கோடி மற்றும் அரிச்சல் முனை வரை உள்ள 465 குடியிருப்புகளின் எண்ணிக்கை (250 வீடுகளுக்கு 3 நபர்கள்) தேவைப்படும் துப்புரவு பணியாளர்கள் | **8** நபர்கள் |
| கோதண்ட ராமர் கோயில், முகுந்திராயர் சத்திரம், தனுஷ்கோடி, அரிச்சல் முனை ஆகிய பேருந்து நிலையம் நிறுத்தம் பகுதியில் தேவைப்படும் துப்பரவு பணியாளர்கள். | 8 நபர்கள் |
| துப்புரவு மேற்பார்வையாளர் | 1 நபர் |

**நகராட்சி மூலம் புதிய பணியிடம் தோற்றுவிக்கப்பட்டால் – செலவினம்**

| | | |
|---|---|---|
| ஒரு நபருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.18,151/– வீதம் 40 பணியாளர்களுக்கு | : | ரூ. 7,26,040 |
| பாதுகாப்பு உபகரணம் மற்றும் தளவாடங்கள் | : | ரூ. 38,771 |
| EPF 10% | : | ரூ. 72,604 |
| **கூடுதல்** | : | **ரூ. 8,37,415** |

எனவே, இந்நகரினை தூய்மையாக வைத்துக்கொள்ளவும், குப்பையில்லா நகரமாக (Zero garbage town) மாற்றும் பொருட்டு கோதண்டராமர் கோயில் முதல் தனுஷ்கோடி, அரிச்சல்முனை வரை தனியார் (Out Sourcing) மூலம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் தினக்கூலி விலைவிகித அடிப்படையில் 40 துப்புரவு எபணியாளர்களை கொண்டு பணிகள் மேற்கொள்ளவும்,

**தினக்கூலி அடிப்படையில் தனியார் மூலம் பணிகள் மேற்கொண்டால் செலவினம்**

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் தினக்கூலி விலை விகிதப்படி (Schedule of Rate) 40

| | | |
|---|---|---|
| | துப்புரவு பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.384/– வீதம் 30 நாட்களுக்கு ரூ.4,60,800/– ஆகும் . தனியார் மூலம் நியமனம் செய்து துப்புரவுப்பணி மேற்கொள்ளப்பட்டால், இந்நகராட்சி நிர்வாகத்திற்கு மாதமொன்றுக்கு ரூ.2.91 இலட்சம் சேமிப்பு ஏற்படும்.<br>எனவே, இந்நகர் கோயில் நகரமாக இருப்பதால் இந்தியாவின் அனைத்து பகுதிகளிலிருந்தும் முக்கிய பிரமுகர்கள் வருகை புரிவதாலும், பொதுமக்கள் மற்றும் யாத்தீரிகர்கள் நலன் கருதி பொதுச்சுகாதாரம் பேணவும் தனியார் மயம் மூலம் துப்புரவு பணியினை செய்ய பணியாளர்களின் ஊதிய செலவினம், பணியாளர்களுக்கான EPF. ESI மற்றும் EDLI இதர செலவினஙகள் உட்பட ஒரு வருடத்திற்கான உத்தேச செலவினம் ரூ.**56,06,400/–**ஆகும். மேற்படி பணிகளுக்கும் அதன் செலவினத்திற்கும் நிர்வாக அனுமதி பெறும்பொருட்டு அரசுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்க வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம் | |
| **12** | இராமேஸ்வரம் நகராட்சி இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள இரண்டாம் நிலை நகராட்சியாகும். 21 வார்டுகளை கொண்ட இந்நகராட்சியின் மக்கள் தொகை 44797 ஆகும் (2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி). இந்நகராட்சியின் மொத்த பரப்பளவு 53 சதுர கிலோ மீட்டர் மேற்படி பரப்பளவில் 10 சதுர கி. மீ மக்கள் வசிக்கும் நகரபகுதியாகும். 107 தெருக்கள் அடங்கிய இந்நகரில் உத்தேசமாக 12746 குடியிருப்புகள் உள்ளது. இந்நகரம் மிக முக்கிய உலக புகழ் பெற்ற வழிபாட்டுத்தலங்களில் ஒன்றாகும். ஆண்டொன்றுக்கு நாட்டின் அனைத்து பகுதிகளிலிருந்தும் சராசரியாக ஒரு கோடி யாத்ரீகர்கள் இந்நகரிலுள்ள இராமநாதசுவாமி கோவிலுக்கு வந்து செல்கிறார்கள்.<br>மேலும் 1964 ம் ஆண்டு தனுஷ்கோடியானது முற்றிலுமாக இயற்கை சீற்றத்தால் அழிவுற்றப்பட்டது. | **தீர்மானம் எண். 227 அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | மாண்புமிகு இந்திய பாரத பிரதமர் அவர்கள் 27.07.2017 அன்று தனுஷ்கோடி அரிச்சல்முனையில் புதியதாக உருவாக்கப்பட்ட தார்சாலையை திறந்து வைத்துள்ளனர். மேற்படி பகுதியில் சுற்றுலா பயணிகளின் வருகை மற்றும் யாத்ரீகர்கள் வருவதால் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2000 ன்படி தூய்மையான நகரமாக பேண பேருந்து நிலையத்தில் இருந்து அரிச்சல்முனை வரை (23 கி.கீ) போதிய எண்ணிக்கையில் துப்புரவு பணியாளர்கள் இல்லாத காரணத்தால் பொதுச்சுகாதாரப்பணியில் சுணக்கம் ஏற்படுகிறது. இந்நகர் கோயில் நகரமாக இருப்பதால் அயல்நாடு மற்றும் இந்நாட்டைச் சேர்ந்த யாத்ரீகர்கள் அதிக எண்ணிக்கையில் தினசரி வந்து செல்கின்றனர். மேலும், அடிக்கடி மாண்புமிகு மத்திய, மாநில அமைச்சர்கள் வந்து செல்லும் தலமாகவும் உள்ளது. தை, ஆடி அமாவாசை மற்றும் மாதந்தோறும் வரும் அமாவாசைகளில் தர்ப்பணம் செய்பவர்கள் அதிக அளவில் வந்து செல்வதால், அக்னிதீர்த்தம், தனுஷ்கோடி அரிச்சல்முனை கடலில் விடும் கழிவு துணிகள் மற்றும் தர்ப்பணப் பொருட்கள், கடல்பாசிகள் அதிகளவில் கடற்கரையில் ஒதுங்குவதால் துப்புரவு பணி செய்வதில் கூடுதல் சுமை ஏற்படுகிறது.<br>மேலும், இராமேஸ்வரம் தீவு அபிவிருத்தி கூட்டத்தில், மாவட்ட ஆட்சியர், இராமநாதபுரம் அவர்களால், கோதண்டராமர் கோயில் , முகுந்திராயர் சத்திரம், தனுஷ்கோடி மற்றும் அரிச்சல்முனை ஆகிய பகுதிகளில் தூய்மை பணியினை மேற்கொண்டு தூய்மையாக வைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி, இந்நகராட்சிக்கு மேற்குறிப்பிட்ட பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை சேகரித்து அப்புறப்படுத்துவதற்கு 4 எண்ணம் இலகுரக வணிக வாகனம் (Light Commercial Vehicle - LCV) ரூ. 22.40 இலட்சத்திற்கு வாங்குவதற்கு உரிய கருத்துரு தயார் செய்து, அரசுக்கு அனுப்பி முழுமானியமாக பெறுவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம் | |

| | | |
|---|---|---|
| | 2. 4 எண்ணம் இலகுரக வணிக வாகனம் (Light Commercial Vehicle - LCV) ரூ. 22.40 இலட்சத்தினை முழுமானியமாக பெறுவதற்கு அரசுக்கு கருத்துரு அனுப்பலாம். | |
| **13** | இராமேஸ்வரம் நகராட்சி 2019–2020 நிதியாண்டின் வரவு செலவு திட்ட அறிக்கை தனி அலுவலரின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br><br>மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். | **தீர்மானம் எண். 228 அனுமதிக்கப்பட்டது** |
| **14** | இராமேஸ்வரம் நகராட்சிப்பகுதியில் நெகிழி பொருட்கள் தடை செய்யப்பட்டுள்ளதனை பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திட நோட்டீஸ் அச்சடித்தவகையில் சுபா டிஜிட்டல் பிளக்ஸ் நிறுவனத்திற்கு ரூ. 19525 வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br><br>மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண். 229 அனுமதிக்கப்பட்டது** |
| **15** | இராமேஸ்வரம் நகராட்சி பொதுசுகாதார பிரிவிற்கு TATA ACE வாகனத்தினை பழுது நீக்கம் செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்பள்ளிகள் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | **தீர்மானம் எண். 230 அனுமதிக்கப்பட்டது** |

| **TN 21 BC 1265 TATA ACE** | | |
|---|---|---|
| 1 | Sri Vignesh Engineering Works, Ramanathapuram | 112569 |

| | | |
|---|---|---|
| 2 | A.R. Engineering Works, Ramanathapuram | 120384 |
| 3 | N.S. Auto Electrical Works, Ramanathapuram | 100935 |

| **TN 21 BC 1245 TATA ACE** | | |
|---|---|---|
| 1 | Sri Vignesh Engineering Works, Ramanathapuram | 113118 |
| 2 | A.R. Engineering Works, Ramanathapuram | 121033 |
| 3 | N.S. Auto Electrical Works, Ramanathapuram | 102210 |

**அலுவலகக்குறிப்பு:**

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த பட்ச விலைப்புள்ளி தொகை கொடுத்துள்ள N.S. Auto Electrical Works நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம் நகர்மன்ற தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவை மன்ற அனுமதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| **16** | இராமேஸ்வரம் நகராட்சியில் உள்ள கீழ்கண்ட விபரப்படியான வாகனங்களுக்கான Insurance தொகை வழுங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>1. TN 65 J 6409 – 14752<br>2. TN 65 Q 8201 – 15840 | **தீர்மானம் எண். 231 அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | 3. TN 65 D 7324 – 16173<br>4. TN 65 AB 4165 – 32093<br>5. TN 65 AD 1837 – 33315<br>6. TN 65 Q 2764 – 31575<br>7. TN 65 R 2083 – 32093<br>8. TN 21 BC 1245 – 20983<br>9. TN 21 BC 1265 - 20983<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br><br>• மன்றம் அனுமதிக்கலாம்.<br>• பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று கட்டணம் செலுத்தியதையும் அனுமதிக்கலாம். | |
| **17** | இரமேஸ்வரம் நகராட்சி குத்தகை இனங்களுக்கான பொது ஏல அறிவிப்பினை மாலை முரசு நாளிதழ் வாயிலாக பிரசுரம் செய்ததற்கு விளம்பரக் கட்டணம் ரூ. 10500/– செலுத்த மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br><br>மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண். 232 அனுமதிக்கப்பட்டது** |
| **18** | இராமநாதபுரம் மாவட்டத்தில் பாராளுமன்றத் தேர்தல் 2019, 100 சதவீதம் வாக்கப்பதிவு உறுதி செய்திடும் வகையில் வாக்காளர் விழிப்புணர்வு மனித சங்கிலி (Human Chain) 3000க்கு அதிகமானோர் | **தீர்மானம் எண். 233 அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | பஙகேற்க நிகழ்வு பாம்பன் பாலத்தில் நடைபெற உள்ளது. மேலும் வாக்காளர் விழிப்புணர்வு மணல் சிற்ப கண்காட்சி அப்துல்கலாம் நினைவிடத்தில் நிகழ உள்ளது.<br><br>மேலும், அனைவரக்கும் வாக்களிப்பதை உறுதி செய்திட பல்வேறு தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், துண்டு பிரசுரஙகள் பேனர்கள் மற்றும் இரத செலவினஙகளுக்கு துப்புரவு ஆய்வாளர் திரு. சு.ப. முத்துக்குமார் என்பவருக்கு 1 இலட்சம் முன்பணமாக முன் அனுமதி பெற்று வழஙகியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br><br>தேர்தல் பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று வழஙகியதை அனுமதிக்கலாம். | |
| **19** | இராமேஸ்வரம் நகராட்சிக்கு பொது சுகதாரப் பிரிவுக்கு தேவையான பொது சுகாதார தளவாடச்சாமன்கள் சப்ளை செய்த வகையில் RAMANTHAPURAM DISTRICT CONSUNERSCO-OPWHOLESALE LTD நிறுவனனத்திற்கு ரூ.478224 முன் அனுமதி பெற்று வழஙகியது மன்ற அனுமதி வேண்டப்படுகிறது<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br><br>பொது சுகதாரப் பணிகள் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று வழஙகியதை அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண். 234 அனுமதிக்கப்பட்டது** |
| **20** | இராமேஸ்வரம் நகராட்சிக்கு பொது சுகதாரப் பிரிவுக்கு தேவையான பொது சுகாதார தளவாடச்சாமன்கள் மற்றும் இதர பணிகளுக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.20.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br><br>அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண். 235 அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| **21** | இராமேஸ்வரம் நகராட்சிக்கு பயன்பாட்டில் உள்ள வாகனங்களுக்கான பழுது நீக்கம் பணி மற்றும் இன்சூரன்ஸ் மற்றும் இதர கட்டணங்களுக்காக ஆகும் உத்தேச வெலவினம் ரூ.20.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது | **தீர்மானம் எண். 236 அனுமதிக்கப்பட்டது.** |
| **22** | இராமேஸ்வரம் நகராட்சியில் 2019–2020ம் நிதி ஆண்டில், ஒப்பந்தப்புளளி மற்றும் இதர தொடர்பான விபரங்களை தினசரி நாளிதழில் விளள்மபரம் செய்தவகையில் உரிய விளம்பரக்கட்டணத்தை உரிய நிறுவனங்களுக்கு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br><br>அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண். 237 அனுமதிக்கப்பட்டது.** |

**ஆணையாளர்/தனிஅலுவலர்,**
இராமேஸ்வரம் நகராட்சி.